முதல் 75 திருமணங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இது அதிக மக்கள் வரக்கூடிய கோயிலாகும். இந்தக் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தித் தர வேண்டுமாய் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டினுடைய நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 1006 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் நடைபெற்று, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை இந்த அவைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

90—

புனரமைத்தல்

***1533—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென் சென்னையில் வீராங்கல் ஓடையைப் புனரமைப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தென் சென்னை, வீராங்கல் ஓடையைப் புனரமைப்பு செய்யும் பணிகளை முழுவதுமாக மார்ச் 2012-ற்குள் முடிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

91—

சுற்றுச்சூழல்

*__1404—திரு. ஜே.சி.டி. பிரபாகர்:__

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி, அன்னை சத்யா நகரிலுள்ள நவீன மயானத்திலிருந்து வெளியேறும் புகையினைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். வில்லிவாக்கம் தொகுதி, அன்னை சத்யா நகரிலுள்ள சென்னை மாநகராட்சியினால் இயக்கப்படும் நவீன மயானத்திலிருந்து வெளிவரும் புகையினைக் கட்டுப்படுத்த மாசுக் கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் அங்கு பொருத்தப்பட்டுள்ள மாசு தடுப்புச் சாதனங்களைத் திறனுடன் இயக்குமாறும், பெசன்ட் நகர் மற்றும் கிருஷ்ணாம்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள மாசு தடுப்பு அமைப்புகளைப் போன்று சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மயானங்களிலும் மாசு தடுப்பு அமைப்புகளை ஏற்படுத்துமாறு சென்னை மாநகராட்சிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.